தினமணி

13-11-2024

### ஆக்கிரமிப்பு குடியிருப்புகளை அகற்ற எதிர்ப்பு

# இரண்டாவது நாளாக காத்திருப்புப் போராட்டம்

**மதுரை, நவ. 12:** மதுரை பீ.பீ. குளம், முல்லைநகர் பகுதியில் நீர்நிலை ஆக்கிரமிப்பில் உள்ள 500-க்கும் அதிகமான வீடுகளை இடித்து அப்புறப்படுத்த எதிர்ப்புத் தெரிவித்து, அந்தப் பகுதி மக்கள் 2- ஆவது நாளாக செவ்வாய்க்கிழமையும் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பீ.பீ.குளம் கண்மாயின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து பீ.பீ. குளம், முல்லைநகர் பகுதிகளில் கட்டப்பட்ட குடியிருப்புகளை அகற்ற நீர்வளத் துறை அண்மையில் அறிவிப்பு வெளியிட்டது. பிறகு, ஆக்கிரமிப்பில் உள்ள 592 குடியிருப்புகளில் அறிவிப்பாணையும் ஒட்டப்பட்டது.

ஏற்கெனவே இரண்டு முறை அறிவிப்பு வழங்கியும் ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் உள்ளவர்கள் ஞாயிற்றுக்கிழமைக்குள் (நவ.10) தாமாக முன்வந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இல்லாவிடில், திங்கள்கிழமை (நவ. 11) நீர்வளத் துறை சார்பில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.



மதுரை மாநகராட்சி முல்லை நகர் ராணுவக் குடியிருப்புப் பகுதியில் செவ்வாய்க்கிழமை 2-ஆவது நாளாக காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தப் பகுதி மக்கள்.

இதுதொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. விசாரணையில், வழக்கு குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி தமிழக அரசு, மதுரை மாவட்ட நிர்வாகம் உரிய பதிலளிக்க கால அவகாசம் வழங்கி, வருகிற 15-ஆம் தேதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இதனிடையே, முல்லைநகர் ராணுவக் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த மக்கள் குடியிருப்புப் பகுதிகளை அகற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, திங்கள்கிழமை இரவு சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**2-ஆவது நாளாக காத்திருப்புப் போராட்டம்:** இதனிடையே, தங்களது கோரிக்கையை வலியுறுத்தி, முல்லைநகர் ராணுவக் குடியிருப்பு பகுதி சாலையில் அந்தப் பகுதி பொதுமக்கள் 2-ஆவது நாளாக செவ்வாய்க்கிழமையும் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில், திரளானோர் கலந்து கொண்டு குடியிருப்புகளை அகற்றக் கூடாது எனவும், தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முழக்கங்களை எழுப்பினர்.

இதுபற்றி முல்லைநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் கூறியதாவது:

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு வசித்து வருகிறோம். ஆக்கிரமிப்புகளை அகற்றினால் முல்லைநகர், வைகை நதி குடியிருப்பு, பீ.பீ.குளம் பிரதான சாலை உள்ளிட்ட பகுதிகளில் ஏறக்குறைய 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும். தமிழக அரசு எங்கள் கோரிக்கையை ஏற்று குடியிருப்புகளை அகற்றக் கூடாது. கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்றனர்.

**போக்குவரத்துக்கு பாதிப்பில்லை:** போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் இதுவரை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. பொதுமக்கள் தங்கள் வீட்டின் முன் உள்ள சாலையில் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால், போக்குவரத்துக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை.

**போராட்டத்துக்கு மார்க்சிஸ்ட் ஆதரவு:** முல்லை நகர் பகுதியில் காத்திருப்புப் போராட்டம் நடத்தி வரும் மக்களை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்டச் செயலர் மா. கணேசன், மாநிலக் குழு உறுப்பினர் இரா. விஜயராஜன், பகுதிக் குழு செயலர்கள் ஏ.பாலு, வி.கோட்டைச்சாமி, மாமன்ற உறுப்பினர் டி.குமரவேல், **மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றி திபேன் ஆகியோர் செவ்**வாய்க்கிழமை சந்தித்து போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். மேலும், அந்தப் பகுதி மக்களின் கோரிக்கைகளை, தமிழக முதல்வரின் கவனத்துக்கும் கொண்டு செல்வதாகவும் தெரிவித்தனர்.